7.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.294/2019

PROSECUTION WITNESS P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடாச்சலம் | Caste | : |
| Father's Name | : பெருமாள் | Calling | : |
| Husband’s Name | : | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

1 ம் எதிரி ஆஜர். (2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 17.10.2024

CMP.No. 19156/2023 மனுதாக்கல் செய்யப்பட்டு 26.12.2023 ல் அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்குவிசாரணை

1) 2017 ஜூன் மாதம் நான் எங்கள் வீட்டுக்கு மேல்புறம் உள்ள சுவரில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது என்னுடன் 2 ஆண்கள், 2 பெண்கள் வேலையிலிருந்தார்கள். மேற்படி காலக்கட்டத்தில் கனமழை பெய்தது என்றால் சரிதான். மழை முடிந்து 2 நாட்கள் கழித்து வேலை தொடங்கினேன். வீட்டிற்கு மேல் 4 நபர்களும், கீழ் 3 நபர்களும் மொத்தம் 7 நபர்கள் வேலையை தடுத்தார்கள். அப்போது எங்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டது என்றால் எதிரிகள் தான் பேசினார்கள் நாங்கள் பேசவில்லை.

2) மேற்படி நபர்கள் எங்களையோ, வேலை செய்த ஆட்களையோ யாரையும் அடிக்கவில்லை. மேற்படி இடத்தில் 7 நபர்களும் சுமார் 45 நிமிடம் இருந்தார்கள். அந்தநேரத்தில் போலீசார் அங்கு வந்தார்களா என்றால் வரவில்லை. புகார் கொடுத்தபிறகு தான் வந்தார்கள். அன்று பகலே புகார் கொடுத்தேன். நேரம் நினைவில்லை. போலீசார் சம்பவ இடத்தை வந்து பார்த்தார்கள். போலீசார் சேதம் அடைந்த சுவரை போட்டோ எடுத்தார்கள் என்றால் இல்லை. அன்று இரு தரப்பையும் போலீசார் காவல்நிலையம் வரச் சொன்னார்களா என்றால் இல்லை. நாங்கள் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யவில்லை என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காவல்நிலையம் சென்று ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டேனா என்றால் 3 நாட்கள் கழித்து சென்று கேட்டேன், நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள்.

3) நடவடிக்கை இல்லை என்பதால் SP யிடம் பதிவுத்தபாலில் புகார் அளித்தேன் என்றால் ஆமாம். அந்த புகாரின் அடிப்படையிலும் போலீசார் எங்களை விசாரணைக்கு அழைக்கவில்லை. SP அனுப்பிய பதிவுத்தபாலின் ஒப்புகை அட்டையை நான் பெற்று

விட்டேன். அதற்கு பிறகும் நடவடிக்கை ஏதும் இல்லாததால் நீதிமன்றத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் புகார் கொடுத்த பிறகு காவல்நிலையம் நான் செல்லவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது போலீசார் என்னை அழைத்தார்கள். அப்போது ஏதும் என்னை விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்று நாங்கள் எடுத்த போட்டோக்களை கொடுத்தோம். போலீசாரிடம் கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் நான் மேற்படி சம்பவத்தை வீடியோவில் பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். நான் சொன்ன தேதி நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தவிர மற்ற 4 நபர்கள் வந்தது குறித்து அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.294/2019

PROSECUTION WITNESS P.W1

| | | | |
|---|---|---|---|
| Name | : கலையரசி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Husband's Name | : வெங்கடாச்சலம் | | |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

1 ம் எதிரி ஆஜர். (2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2,3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 17.10.2024

CMP.No. 19156/2023 மனுதாக்கல் செய்யப்பட்டு 26.12.2023 ல் அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்குவிசாரணை

1) எனது வீட்டிற்கு மேற்புறம் தான் எதிரியின் வீடு உள்ளது. 2 வீடுகளுக்கும் இடையே உள்ள சுவர் எனக்கு பாத்தியப்பட்டது. அந்த சுவர் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்காகத்தான் ஈரோடு 1 ADM கோர்ட் நீதிமன்றத்தில் O.S.62/2014 ல் வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்றால் ஆமாம். அந்த வழக்கில் எதிரிகள் எதிர்வாதம் தாக்கல் செய்யாத காரணத்தால் எனக்கு ஒரு தலைபட்சமாக தீர்ப்பானது என்றால் சரிதான். பின்னிட்டு ஒரு தலை பட்ச தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு வழக்கு தீர்ப்பாகியது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் சுவர் பொது சுவர் என தீர்ப்பானது என்றால் சரியல்ல.

2) மேற்படி சுவர் கருங்கல்லால் கட்டப்பட்ட மண்சுவர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலம் மழைக்காலம் என்றால் சரிதான். மழையினால் மண்சுவர் கரைந்தது என்றால் சரிதான். மேற்படி சுவர் கரைந்து சுவர் சரிந்தால் எதிரியின் வீட்டு பக்கம் தான் சரியும் என்றால் சரிதான். அதனால் எதிரிகள் என்னை சுவரை சரிசெய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சுவர் குறித்து எங்களுக்கும் எதிரிகளுக்கும் பல வருடங்களாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். 18.06.2017 ம் தேதி தகராறு நடந்ததாக போலீசாருக்கு போன் செய்தேன் என்றால் சரிதான். ஒரு மணி நேரம் கழித்து பகல் 11.00 மணிக்கு போலீசார் வந்தனர். போலீசார் என்னை விசாரித்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். பிறகு என்னையும், எனது கணவரையும், எதிரி தரப்பினரையும் போலீசார் காவல்நிலையம் வரச் சொன்னார்கள் என்றால் சரிதான்.

3) காவல்நிலையத்தில் போலீசார் சுவரை சரி செய்ய சொன்னார்களா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் சம்பவத்தை வீடியோ பதிவு செய்ததாக சொல்லி பதிவு செய்த வீடியோவை அன்றைய தேதியில் நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் தவிர்த்து, அய்யாவு, அவரது மருமகள், மற்றும் இராமகிருஷ்ணன் ஆகியோர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் முதலில் கொடுத்த புகாரின் மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 6 மாதங்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் தனிபுகார் தாக்கல் செய்தேன்.

4) எனது சொந்த அனுமானத்தின்பேரில் தான் சேதர மதிப்பு ரூ.30,000/- என்று புகாரில் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் புகார் அளித்தபிறகு போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. பிறகு போலீசார் அழைப்பாணை கொடுத்த பிறகு தான் சாட்சியமளிக்க வந்தேன் என்றால் ஆமாம். அய்யாவு, அவரது மருமகள், மற்றும் இராமகிருஷ்ணன் ஆகியோர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை என்று நீதிமன்றத்திற்கு வந்து தான் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். இந்த 3 பேர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5) நான் புகாரில் தடுக்கும்போது எனது கணவர் மேலிருந்து கீழே விழுந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் நான் போட்டோ எடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) நான் சொன்ன தேதி நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.